# நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம், மீஞ்சூர்

குடிநீர் தட்டுபாடு இன்றி கிடைக்கும் பொருட்டும் , சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குதலை பெருக்கும் பொருட்டும், தமிழ்நாடு அரசு சென்னை நகருக்கு வடக்கில், மீஞ்சூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் அமைந்துள்ளகாட்டுப் பள்ளிகிராமத்தில்,நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தினை அமைக்க முடிவுசெய்து, "நிலையத்தைவடிவமைத்து, சொந்தமாகநிறுவி, இயக்கி,பின்ஒப்படைக்கும்முறை (DBOOT)" அடிப்படையில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தினை அமைக்க முடிவு செய்தது .

இப்பணிக்கு M/S.IVRCL மற்றும் M/s.Befesa(Spain) ஆகிய நிறுவனங்களின் கூட்டமைப்பு நிறுவனமான M/s.Chennai Water Desalination Ltd. அவர்களுடன், சென்னை குடிநீர் வாரியம் மொத்த குடிநீர் கொள்முதல் முறையில் வாங்குவதற்கான 25 ஆண்டுகால ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டது. இந்நிலையம் அமைக்கும் பணிக்கு, மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சராக பொறுப்புவகித்தபோது, 25.02.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிலையம் முழுவதும் வடிவமைக்கப்பட்டு 25.07.2010 அன்று தனது உற்பத்தியை தொடங்கியது . இந்நிலையம் 31.07.2010 அன்று, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்தினை அமைக்க கூட்டமைப்பு நிறுவனத்தால் சுமார் ரூ.500 கோடி செலவிடப்பட்டது. கடல்நீர் சுத்திகரிப்பு

நிலையத்தில் தினமும் 237 மில்லியன் லிட்டர் கடல்நீரை புவியீர்ப்பு மூலம் எடுத்து எதிர் மறைசவ்வூடு பரவுதல் முறையில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீராக சுத்திகரிக்கப்படுகிறது.

இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் வடசென்னை பகுதிகளான மணலி ,கத்திவாக்கம் ,எண்ணூர் ,மாதவரம் , திருவொற்றியூர் , தண்டையார்பேட்டைமற்றும் வியாசர்பாடி பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 லட்சம் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கிறது . இந்தநிலையம் தற்போது 13-வது வருட இயக்கத்தில் உள்ளது. தற்போதைய உற்பத்தி விலை ஒரு கிலோ லிட்டர் ரூ.47.54 என கணக்கிடப்பட்டுள்ளது .